**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 278/2019 P.W.8/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. சத்யவாணிமுத்து | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** **08.01.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு 2013ம் வருடம் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வந்தபோது 10.11.2013 அன்று 11.00 மணிக்கு நான் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலைய பொறுப்பிலிருக்கும் போது, இரணியல் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற **சி.எம்.பி 5683/2013,** நாள் 27.08.2013 என்ற தபாலை பார்வையிட்டேன். ஆய்வாளரின் உத்தரவு படியும் மனுவின் தன்மைப்படியும் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையக்குற்ற எண். 24/2013 சட்டப்பிரிவுகள் 498 எ, 406, இ.த.ச மற்றும் 4. 6 D.P Actன் படி வழக்கு பதிவுச் செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் புலன்விசாரணைக்காக ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல்நிலையம் அவர்களுக்கு சமர்ப்பித்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை :**

நான் 2013ம் வருடம் முதல் மேற்படி காவல்நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில் 27.03.2013 அன்று புகார்தாரர் எங்கள் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி புகாரினை விசாரித்ததில் அதில் உண்மை இல்லை என்று தெரிய வந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. அதில் நான் நடவடிக்கை எடுக்காததால் தான் அவர் நீதிமன்றத்தை நாடியுள்ளார் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

2. அவ்வாறு நடவடிக்கை இல்லாததால் பாதிக்கப்பட்ட புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யப்பட்டது என்றால் இருக்கலாம். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யப்படவில்லை என்றாலும், உண்மைக்கு மாறாக கொடுக்கப்பட்ட புகாரினை விசாரணை செய்யாமல் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட உத்தரவிற்காக உண்மைக்கு மாறாக வழக்கை பதிவுச் செய்தேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.